## விவேகானந்தா ஆசிரம நிலம்

# வர்த்தகப் பகுதியாக அறிவிக்கப்படுவதா?




கோலாலம்பூர், மே 9-

கோலாலம்பூரின் மையப்பகுதியில் இருக்கும் பிரிக்பீல்ட்சில் அமைந்துள்ள விவேகானந்தா ஆசிரமம் வீற்றிருக்கும் நிலம் 2040 கோலாலம்பூர் உள்ளூர் திட்டத்தின் கீழ் பிரதான வர்த்தகப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி தருவதாக உள்ளது.

விவேகானந்தா ஆசிரமத்தைக் காப்போம் என்ற பணிக்குழு அரசாங்கத்தின் இந்த முடிவு மிகுந்த ஏமாற்றமளிக்கிறது என்று தெரிவித்திருக்கிறது. அந்த நிலம் பொதுமக்கள் வசதி இடமாக வரையறுக்கப்பட வேண்டும் என்ற தங்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதில் அப்பணிக்குழு ஏமாற்றமும் அதிர்ச்சியும் தெரிவித்தது.

பக்கம் 13




முதல் பக்கத் தொடர்ச்சி

## விவேகானந்தா ஆசிரம...

2040 கோலாலம்பூர் உள்ளூர் திட்ட வரைவு மறு ஆய்வு செய்யப்படும்போது தங்களின் இந்தக் கோரிக்கையை பரிசீலிக்குமாறு அப்பணிக்குழு கேட்டுக்கொண்டது. விவேகானந்தா ஆசிரமம் அப்பகுதியின் நினைவுச்சின்னமாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா ஆசிரமத்தைக் காப்போம் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் வழக்கறிஞர் தேவகுஞ்சரி சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

பிரதான வர்த்தகப் பகுதியாக இந்த இடம் வரையறுக்கப்பட்டால் எதிர்காலத்தில் மேம்பாட்டுப் பணிகளுக்கு அந்த இடம் எடுத்துக்கொள்ளப்படும். இந்தப் புராதனச் சின்னமும் காணாமல் போய்விடும் என்று அவர் அச்சம் தெரிவித்தார்.

விவேகானந்தா ஆசிரமம் தேசிய புராதன சட்டத்தின் (சட்டம் 645) கீழ் புராதன கட்டடம் பிரிவு 1 என்று பாதுகாக்கப்படுமா என்ற எங்களுடைய கேள்விகளுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் பதிலளித்திருக்கின்றனர். ஆனால் அப்பதில்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்று தேவகுஞ்சரி தெரிவித்தார். இந்தப் பகுதியில் மேம்பாட்டுத்திட்டங்கள் மேற்கொள்ளப்படக்கூடாது, பொதுமக்கள் வசதி மண்டலமாக அது தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விவேகானந்தா ஆசிரமம் புராதனக் கட்டடமாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அது சாத்தியமா என்பது மிகப் பெரிய கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்று லக்கி கார்டனில் வசிக்கும் பி.தமிழ்வாணன் கூறினார். எங்களுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் இம்முடிவு வேதனை தருவதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2040 கோலாலம்பூர் உள்ளூர் திட்ட வரைவுக்காக கோலாலம்பூர் மாநகர் மன்றம் இன்று மே 9ஆம் தேதி காலை 9.30 மணியிலிருந்து மதியம் 4.30 மணி வரை பொது சந்திப்பு நிகழ்ச்சியை நடத்துகிறது. அனைத்து தேவையான நடவடிக்கைகளைக் கடந்துதான் இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷரிப் கூறினார்.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமிற்கு இது குறித்து விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதத்தில் 2040 கோலாலம்பூர் பெருந்திட்டம் வரைவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு அரசுப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்று அவர் சொன்னார். பொதுமக்களுடனான இந்தச் சந்திப்பானது இந்தப் பெருந்திட்ட வரைவு, அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து விளக்கம் தரப்படும் என்றும் அவர் சொன்னார்.

மேலும் இவ்விவகாரத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளிப்படை, நம்பகத்தன்மையை அதிகரிக்க விரும்புகிறது என்றும் தெரிவித்த அவர், இந்த மாற்றங்களை சிலர் ஏற்றுக்கொண்டனர். மேலும் சிலர் ஏமாற்றம் தெரிவித்திருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே அதிகமான மாநகர் பூங்காக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று கோலாலம்பூர் முன்னாள் மேயர் நோர் இஷாம் அமாட் டஹ்லான் கேட்டுக்கொண்டார். கோலாலம்பூரை ஓர் எழுச்சி தரும் மாநகராக உருவாக்குவதற்கு லண்டனில் உள்ள ஹைட் பார்க் போன்று இங்கு அதிகமான பூங்காக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அவர் மாநகர் மேம்பாட்டை நிர்வகிப்பதற்கு ஒரு தனிப்பணிக்குழு அமைக்கப்பட வேண்டும் என்றார்.

இதுதவிர சிலாங்கூர், பேராக் எல்லைகளுக்கு இடையில் பாண்டார் மலேசியா உருவாக்கப்பட வேண்டும் என்றும் நோர் இஷாம் பரிந்துரைத்தார்.